**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, நாகப்பட்டினம்**

முன்னிலை : திரு. J. ஆன்ஸ் ராஜா, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், திருக்குவளை

நீதித்துறை நடுவர் எண் 1, நாகப்பட்டினம்.(மு.கூ.பொ)

2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 16 -ம் நாள், வியாழக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.420/2025**

**CNR No: TNNG02-001468-2025**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண் (Name of the Police Station and Crime Number of offence) | நாகப்பட்டினம் நகர காவல் நிலையம், குற்ற எண்.194/2022 |
| 2. | எதிரியின் பெயர் (Name) | பாபு (55/2022)<br>த/பெ. இராமசாமி<br>கீரைக்கொல்லை தெரு,<br>நாகப்பட்டினம். |
| 3. | எதிரியின் தந்தை (Father's Name) | |
| 4. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரியின் முகவரி (Residence) | |
| 6. | எதிரியின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Date of Occurrence) | 01.07.2022 |
| 8. | புகார் தேதி (Complaint date) | 01.07.2022 |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் (Apprehension date) | -- |
| 10. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on bail | Anticipatory Bail - 22.08.2022 |
| 11. | Commitment | Nil |

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.16 17:38:15 +0530

| | | |
|---|---|---|
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of trial) | 01.07.2026 |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of trial) | 01.07.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence of Order) | 16. 07.2026 |
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு(Service of copy Judgment of finding on Accused) | எதிரிக்கு எதிரான 506(1) IPC மற்றும் 4 of TNPCEI Act கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரி குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரியை பிரிவு 248(1)- .கு.வி.மு.ச வின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் வழக்கு சொத்துகள் ஏதும் இல்லாததால் அதுகுறித்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.<br><br>இவ்வழக்கில் எதிரி மற்றும் எதிரியின் ஜாமின்தாரர்கள் எழுதிக்கொடுத்த பிணை ஆவணங்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | Nil |
| 17. | பிரிவு 313 (1)(b) கு.வி.மு.ச -ன் கீழ் எதிரியை விசாரணை செய்த நாள் | 07.07.2026 |

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.16 17:38:22 +0530

| | | |
|---|---|---|
| | (Date of examination of accused U/s.313(1)(b) Cr.P.C) | |
| 18. | எதிரி தலைமறைவான விபரம் (Details of abscondence of accused) | Nil |
| 19. | எதிரியின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் (Date of Examination in chief and cross examination of witnesses) | Witnesses / Chief / Cross<br>PW1 / 01.07.2026 / --<br>PW2 / 01.07.2026 / --<br>PW3 / 01.07.2026 / 01.07.2026 |
| 20. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட பல்வகை மனுக்கள் (Filing of miscellaneous petitions) | Nil |
| 21. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் (Date of filing of final report) | 02.07.2025 |
| 22. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த விபரம் (Period of Remand of Accused) | Nil |
| 23. | மேலமை நீதிமன்றத்தால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் (Grant of stay by superior Courts and the results thereof; and) | Nil |
| 24. | பாதிக்கப்பட்ட நபருக்கான இழப்பீடு உத்தரவு விபரம் (Details of Victim compensation order) | Nil |

Nested table in item 19:

| Witnesses | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 01.07.2026 | -- |
| PW2 | 01.07.2026 | -- |
| PW3 | 01.07.2026 | 01.07.2026 |

**********

இவ்வழக்கானது 02.07.2025-ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.16 17:38:29 +0530

எடுக்கப்பட்டு, 07.07.2026 ம் தேதியன்று என் முன்பு இறுதிவிசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசுத்துறை வழக்கறிஞர் நிலை எண்.2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. பி. அன்பு செல்வம் அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதம் மற்றும் ஆவண சாட்சியங்களை பரீசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கின் வாதியான கண்ணன் என்பவர் நாகப்பட்டினம், கீரைக் கொல்லைத் தெருவில் வசித்து வருகிறார். அதே ஊரைச் சேர்ந்த எதிரி பாபுவிடம் வாதியானவர் அவரது குடும்ப செலவிற்காக 05.04.2021 ஆம் தேதி ரூ.1 லட்சம் கடனாக பணம் வாங்கியும், அதற்கு மாதாமாதம் ரூ.1.5 லட்சம் எதிரிக்கு வட்டியாக கொடுத்துள்ளார். இந்நிலையில் 01.07.2022 ஆம் தேதி காலை 09.00 மணியளவில் எதிரி வாதியின் வீட்டு வாசலில் நின்று வாதியை பார்த்து வட்டி பணத்தை கொடுக்கவில்லை என்று ஆள் வைத்து தூக்கி விடுவேன் என்று வாதியை கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு நாகப்பட்டின நகர காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானதும் அரசு தரப்பில் எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 கு.வி.மு.ச வின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.16 17:38:35 +0530

3. எதிரிக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின், அரசு தரப்பு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து, எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு விளக்கி, வினவ, பொய் வழக்கு என்றும், தான் குற்றவாளி இல்லை என்றும் மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டு அரசு தரப்பில் 1 முதல் 3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் யாதொரு சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4. **<u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :</u>**

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 - கண்ணன் தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 2022 ஆம் வருடம் காலை 09.00 மணியளவில் தான் வசிக்கும் தெருவான கீரைக்கொல்லை தெருவில் உள்ள தெருவாசிகளுக்கிடையே தகராறு ஏற்பட்டதாகவும், அது சம்பந்தமாக நாகப்பட்டினம், நகர காவல் நிலையம் சென்றிருந்ததாகவும், அங்கு வெற்றுத் தாளில் போலீஸார் தன்னிடம் கையொப்பம் பெற்றதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அதில் என்ன எழுதியிருந்தது என்பது தனக்கு தெரியாது என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக சாட்சியமளித்துள்ளார்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.16 17:38:41 +0530

5. இவ்வழக்கின் அ.சா.2. கமலநாதன் தனது சாட்சியத்தில் அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், வழக்கு சம்பந்தமாக எந்த விபரமும் தனக்கு தெரியாது என்றும், போலீஸார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக சாட்சியமளித்துள்ளார்.

6. இவ்வழக்கின் அ.சா.3 - திரு. சுந்தர் ராஜன் - காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் கடந்த 01.07.2022 ஆம் தேதி 18.00 மணிக்கு நாகப்பட்டினம், நகர காவல் நிலையத்தில் தலைமை காவலர் பாஸில் நிலைய பொறுப்பில் இருந்தபோது நாகப்பட்டினம், கீரைக் கொல்லை தெருவை சேர்ந்த கண்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி புகார் மனுவை கொடுத்ததாகவும், அந்த புகாரின் அடிப்படையில் நிலைய குற்ற எண். 194/2022 , ச/பி. 506(1) IPC மற்றும் 4 of TNCEI Act 2003 ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கு கோப்பானது புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் வசம் கொடுக்கப்பட்டதாகவும், பின்னர் ஆய்வாளர் அன்றைய தினம் 19.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை யிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், சாட்சிகளை விசாரித்த நிலையில் சம்பவம் உண்மையென தெரிய வர எதிரியை தேடியபோது எதிரி மாண்பமை நாகப்பட்டினம், அமர்வு நீதிமன்றத்தில்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.16 17:38:46 +0530

முன்பிணையில் சென்ற விபரம் தெரிய வந்ததாகவும், இத்துடன் அவரது விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது ச/பி. 506(1) IPC மற்றும் 4 of TNCEI Act 2003 ன் படி குற்றமென 07.11.2022 ஆம் தேதியன்று குற்ற அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.3-ன் மூலமாக புகார் மனு , முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம், ஆகிய சான்றாவணங்கள் முறையே அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.4 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அரசுத்தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளை தொகுத்து பிரிவு 313 (1)(b) கு.வி.மு.ச வின் கீழ் கேள்வி எழுப்ப பொய் சாட்சி என்றும். வழக்கு குறித்து கேள்வி எழுப்ப பொய் வழக்கு என்றும் மறுத்துரைத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறப்பட்டு, சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

8. எனவே, எதிரிக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகங்களுக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

9. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும் சான்றாவணங்களும் பரிசீலிக்கப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.16 17:38:52 +0530

10. இவ்வழக்கில் அ.சா.1 தன்னுடைய புகாரில் 05.04.2022 ஆம் தேதியில் ரூ.1,00,000/- கடனாக பணம் வாங்கியதாகவும், அதற்கு மாதம் மாதம் ரூ.1.5 இலட்சம் வட்டியாக கட்டியதும், இந்நிலையில் 01.07.2022 ஆம் தேதியன்று காலை 09.00 மணியளவில் எதிரி அ..சா.1 வீட்டிற்கு வந்து வாதியை பார்த்து வட்டி பணத்தை கொடுக்கவில்லை என்றால் ஆள் வைத்து தூக்கிவிடுவேன் என்று வாதியை பார்த்து கொலை மிரட்டல்விடுத்ததாக வாதியானவர் அ.சா.2 புகார் மனு கொடுத்துள்ளார். ஆனால் அ.சா.1 ஆனவர் தன்னுடைய சாட்சியத்தில் கடந்த 2022 வருடம் காலை 09.00 மணியளவில் தான் வசிக்கும் தெருவான கீரைகொல்லை தெருவில் தெருவாசிகளுடன் தகராறு ஏற்பட்டதாகவும், அது சம்பந்தமாக தான் நாகப்பட்டினம், நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், புகாரில் என்ன எழுதப்பட்டது தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் மாறுபட்ட சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.3 ன் சாட்சியத்தை வைத்து மட்டும் எதிரியானவர் அ.சா..1 ஐ 01.07.2022 ஆம் தேதி காலை 09.00 மணியளவில் அ.சா.1 பார்த்து வட்டி பணம் கேட்டு மிரட்டினார் என்றும், மேலும் கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினார் என்றும் முடிவுக்கு வர முடியாது. மேலும், அரசு தரப்பால் எதிரி தான் குற்றவாளி என்று சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை.ஆகவே எதிரியானவர் இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட தகுதியுடையவர் ஆகிறார்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.16 17:38:58 +0530

12. இறுதியாக, எதிரிக்கு எதிரான பிரிவுகள் 506(1) IPC மற்றும் 4 of TNCEI Act 2003 கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரியை குற்றவாளியை இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரியை பிரிவு 248(1) கு.வி.மு.ச ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

13. இவ்வழக்கில் எதிரி மற்றும் எதிரி ஜாமின்தாரர்கள் எழுதிக் கொடுத்த பிணை ஆவணங்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.16 17:39:04 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
நாகப்பட்டினம்.(மு.கூ.பொ)

<u>இணைப்பு:</u>

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>

| | |
|---|---|
| அ.சா.1. | திரு. கண்ணன் (நிகழ்நிலை புகார்தாரர்) |
| அ.சா.2 | கமலநாதன் |
| அ.சா.3. | திரு. சுந்தர் ராஜன் - (காவல் ஆய்வாளர்) |

<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் :</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 01.07.2022 | புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 01.07.2022 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 01.07.2022 | முதல் தகவலறிக்கை |
| அ.சா.ஆ.4 | 01.07.2022 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | -- | மாதிரி வரைபடம் |

அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருட்கள் - இல்லை

எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள் - இல்லை

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.16 17:39:09 +0530

நீதித்துறை நடுவர் எண்.1

நாகப்பட்டினம்.(மு.கூ.பொ)

**நகல்**

மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம் அவர்களுக்கு

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1. இந்த தீர்ப்புரையின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

2. இந்த வழக்கில் எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இந்த வழக்கின் எதிரி விசாரணையின் போது பிணையில் இருந்தார்.

4. இவ்வழக்கில் சான்று பொருட்கள் ஏதும் இல்லாததால் அதுகுறித்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.